ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2311/09 - 2022 දෙසැම්බර් මස 19 වැනි සඳුදා - 2022.12.19
*2311/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் 04 ஆம் இலக்க களுதாவளை தெற்கு வட்டாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஞானமுத்து யோகநாதன் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் 04 ஆம் இலக்க களுதாவளை தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக கணபதிப்பிள்ளை தேவமனோகரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான M. B. M. சுப்யான் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு கணபதிப்பிள்ளை தேவமனோகரன் என்பவர் மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபையின் 04 ஆம் இலக்க களுதாவளை தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எம். பி. எம். சுப்யான்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
*2022, திசெம்பர் 19.*

EOG *12 - 0248*